**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No.18/2024 C/W.MCOP.No.23/2024**

Deposition of witness for **RW1** for **Respondent** and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Nithya | Husband Name | : | Sivakumar |
| Village | : | | Age | : | |

**நாள்:30.10.2025.**

**எ.ம.சா.1 முதல் விசாரணை :**

நான் **வட்டார போக்குவரத்து அலுவலகம்** ஒசூரில் **இளநிலை உதவியாளராக** பணிப்புரிந்து வருகிறேன். வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அவர் இன்று மாட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குழு கூட்டம் இருப்பதால் அவருக்கு பதிலாக இவ்வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கி உள்ளார். அந்த அனுமதி கடிதம் **Ex.Y1** ஆகும். சிவகுமார் த/பெ.**Siddhappa,** மல்லசந்திரம் கிராமம், அரசகுப்பம் அஞ்சல், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவருக்கு எங்களது அலுவலக கணினியில் தேடிப்பார்த்ததில் ஓட்டுநர் உரிமம் இல்லை என தெரியவந்தது. மேற்படி விவரம் சா.சா.ஆ.**Y1** ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில்.**

எங்களுக்கு வந்த அழைப்பாணையில் குறிப்பாக எந்த தேதி, மாதம், வருடத்தில் இருந்து எந்த தேதி, மாதம், வருடம் வரை தேடிபார்க்க சொல்லி அழைப்பாணை வந்தது என்றால் குறிப்பாக அழைப்பானையில் தேதி, மாதம், வருடம் சொல்லப்படவில்லை. நாங்கள் எந்த தேதியில் இருந்து தேடிப்பார்த்தோம் என்றால் **2018** ம் ஆண்டில் இருந்து எங்கள் அலுவலகத்தில் ஓட்நர் உரிமம் கணினியில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த ஆண்டில் இருந்து தேடிப்பார்த்தோம். **2018** ம் ஆண்டிற்கு முன்பு சிவகுமார் த/பெ.**Siddhappa,** மல்லசந்திரம் கிராமம், அரசகுப்பம் அஞ்சல், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவர் எங்கள் அலுவலகத்தில் ஓட்நர் உரிமம் பெற்றிருக்கலாம் என்றால் அலுவலக கோப்பை பார்த்து தான் சொல்ல இயலும். எங்கள் அலுவலகம் இல்லாமல் வேறு வட்டரா போக்குவரத்து அலுவலகத்தில் கூட அவர் ஓட்டுநர் உரிமம் வாங்கியிருக்கலாம் என்றால் வாங்கியிருக்கலாம்.

**மறு விசாரணை இல்லை.**

ஓம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.